MADRAS

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 5 | January 1943 | No. 1

விஷய சூசிகை. பக்கம்

ஹிருதயம் (ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள்) 1—6

ஹிருத்யம் (பத்திராதிபர்) 6-12

விஷமஜ்வரம் (மதுக்கூர் Dr. K. ஷாரோடி அவர்கள்) 12-18

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
" " ½-க்கு ரூ 4
" " ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

No 2, Police Station West Lane, Madura.

காபிரைட்] [விலை 0—3—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—42.

வைத்திய சந்திரிகா:— சுதேச வைத்திய முறைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த மாதாந்த பத்திரிகை ஓர் இன்றியமையாத சாதனமாகும். ஸஹஸ்ரயோகம், ஔஷதசாரம், காயகல்பம் அல்லது ரஸாயன முறை, சித்தர் முறை, க்ஷயரோகமும் அதன் சிகித்சையும், ஆக இந்த ஐந்து புஸ்தகங்களும் இதில் பூர்ணமாக வெளிவந்துள்ளன. சென்ற நான்கு வருஷ சஞ்சிகைகளும் தயாராக இருக்கின்றன. ஒவ்வொரு வருஷ சஞ்சிகைகளும் வருஷ சந்தா இரண்டு ரூ.க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு.

ஔஷதசாரம்:—இது வைத்திய சந்திரிகையில் வெளிவந்துள்ளது. இது தனியாக பைண்டு செய்யப்பட்டுள்ளது. அதில் 234 மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. வடதேசங்களில் பெரும்பான்மையாகக் கையாளப்படும் பல உயர்ந்த முறைகள் இதில் அடங்கியுள்ளன. விலை ரூ. 0—12—0 தபால் செலவு வேறு.

ஸஹஸ்ரயோகம்:—மலையாள தேசத்தில் பிரசித்தமான நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. விரிவான குறிப்புகளுடன் கூடியது. கண், காது, மூக்கு, வாது, தொண்டை, சிரஸ், முதலிய உறுப்புகளில் உண்டாகும் நோய்களும் அவைகளுக்கு மருந்தும்சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நடை முறையில் வழங்கிவரும் கஷாயங்கள், தைலங்கள், சூர்ணங்கள், லேகியங்கள், குளிகைகள், முதலியன மிக நேர்த்தியான முறையில் வர்ணிக்கப்பட்டுள்ளன. இதில் மருந்துகள் மொத்தம் 857 காணப்படுகின்றன.

விலை ரூ. 1 தபால் செலவு வேறு.

க்ஷயரோகமும் அதன் சிகிச்சையும்:—இந்நூலில் ஆங்கில முறைப்படியும் ஆயுர்வேதக்கொள்கையையும் அனுசரித்துவிரிவான சிகித்சையும் மருந்து முறைகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

விலை ரூ. 0—8—0 தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:— **பண்டிட் நாராயண அய்யங்கார்,**

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து, மதுரை.

ஹிருதயம்.

(ஈரோடு Dr. V. அச்சுதன் நாயர் அவர்கள் L. I. M.)

போன நவம்பர்மாதம் வெளிவந்த சந்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நமது வியாசத்திற்குப் பத்திராதிபரவர்களால் எழுதப்பட்ட மறுப்பைப் படித்துப்பார்த்தேன் அதை யொட்டி எமதபிப்பிராயத்தில் சில அம்சங்களை மறுபடியும் விளங்கச்செய்ய வேண்டியதாகின்றது ஆனால் V.N. நாயர் அவர்களுடைய வாக்கியசைலியும்யுக்திரீதிகளும் நமது வியாச முழுவதிலும் பிரதிபலிக்கின்றனவென்று பத்திராதிபர் சொல்லியிருக்கிறார். இந்த அபிப்பிராயப் பிரகடனத்தின் தாத்பரியம் என்னவென்று நன்கு புலப்படவில்லை. டாக்டர் V. N. நாயர் அவர்கள் தமிழில் ஏதாவது வியாசம் எழுதியிருந்தால் பத்திராதிபரவர்கள் தயவுசெய்து உதாரணத்திற்காக அதிலிருந்து இரண்டொரு வாக்கியங்கள் எடுத்துக்காட்டி தமதபிப்பிராயத்தை ருஜூப்படுத்துவாரா? 'ஹிருதயரோக விசாரம்' என்ற வியாசமானது டாக்டர் V. N. நாயர் அவர்களால் வடமொழியில் எழுதப்பட்டுள்ளதென்று வாசகர்களுக்குத்தெரியும் அதைத் தமிழில்மொழிபெயர்த்துப் பிரசுரித்தவர் பத்திராதிபரவர்களே யாவர். ஆகையால் வாசகர்களுக்கு அந்த விஷயத்தில் பரிசயப்பட்டுள்ள வாக்கியசைலியானது பத்திராதிபர் அவர்களுடையதல்லாமல் டாக்டர் V. N. நாயர் அவர்களுடையதல்ல. டாக்டர் N. V. நாயர் அவர்களுடைய வாக்கியசைலியும் யுக்திரீதிகளும் நமது வியாசத்திலுள்ளவைபோல் எளிதானவையா யிருக்குமென்று நம்பமுடியவில்லை. சந்தேகத்திற்கிடமின்றி வாஸ்தவம் வெளிப்படும்பொழுது அடிஸ்தானமற்ற தமது அநுமான பிரசாரணத்திற்காக பத்திராதிபரவர்கள் வருந்துவாரென்றே நினைக்கிறோம். (1) Heart, "ஹிருதயம்" என்ற பதங்களின் உச்சாரணத்திலுள்ள சம்பந்தமானது அவை இரண்டும் ஒரே உறுப்பைக்குறிப்பதற்குப் பர்யாப்தமானப்பிரமாணமல்லவென்று சொல்லியிருப்பதைக்கண்டு ஸந்தோஷிக்கிறேன். (2) தசமூல ஸிரா ஹிருத்ஸ்தா:-பத்துஸிரைகள் சுவாஸாசயங்களில் இருப்பதாக நினைக்கிறாரா? என்று கேட்கிறார். ஹிருதயமானது சுவாஸாசயமும்

'ஹார்டும்' சேர்ந்ததாகுமென்ற நமது பக்ஷத்தில் இந்தக்கேள்விக்கு இடம் கிடையாது. பத்து ஸிரைகள் எங்கு இருக்கிறதோ அந்த ஸ்தானத்தை ஹ்ருதயமாக ஒப்பாமலிருக்கக் காரணமென்னவென்று இரண்டாவதாக கேட்கிறார். இதிலிருந்து Heart என்ற உறுப்பில் பத்து ஸிரைகள் இருப்பதாகப்பத்திராதிபர் உண்மையில் நினைக்கிறார் என்று தெரியவருகிறது. எங்கே? அதைக் கொஞ்சம் விளக்கிக்காட்டுவாரா? (3) ரஸாத்மகம் வஹந்த்யோஜ:—ஆயுர்வேத சாஸ்திரத்தில் ரஸமும் ஓஜஸ்ஸும் இரண்டு தனி வஸ்துக்களென்றும் அவைகளுக்குத் தனித்தனி லக்ஷணங்களும் குணவிசேஷங்களும் உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. ரஸ தாதுவானது சரீர போஷணத்திற்கும் உபரிதன்தாது ஷட்கங்களுக்கும் இன்றியமையாத வஸ்துவானதால் ஓஜஸ்ஸுடன் ஒப்பிடப்பட்டிருப்பதாக பத்திராதிபர் சொல்லுகிறார். இங்கே வஹநக்கிரியைக்குக் கர்மமாகவுள்ளது ஒன்றுதான் என்றும் அதன் மாகாம்த்யத்தை அல்லது குணாதிசயத்தைக் காட்டுவதற்காகவே 'ஓஜஸ்' என்ற பதத்தை சுலோகத்தில் நிபந்தனம் செய்துள்ளதென்றும் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் சுலோகத்தைப் பிரித்து அர்த்தம் சொல்லும்போது "ரஸரூபமான ஓஜஸ்ஸை ஸிரைகள் கொண்டு போகின்றனவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே பத்திராதிபரவர்களுடைய ஆசயமானது நன்கு விளங்கவில்லை. ஸிரைகளால் கொண்டு போகப்படும் வஸ்து ரஸதாதுவா அல்லது ஓஜஸ்ஸா? இல்லை ரஸ தாதுவும் ஓஜஸ்ஸும் ஒரே வஸ்துவின் பரியாய நாமங்களாக அவர் நினைக்கிறாரா? அப்படியானால் சாஸ்திரத்தில் இரண்டையும் தனி வஸ்துக்களாகச் சொல்லப்பட்டுள்ளதின் காரணம் என்ன? ரஸாத்மகம் வஹந்த்யோஜ:' என்பதற்கு ரஸத்தின் தாதாத்ம்யம் பெற்ற ஓஜஸ்ஸை ஸிரைகள் வஹித்துக்கொண்டு போகின்றனவென்று நாம் அர்த்தம் பண்ணியுள்ளோம். வாயுரூபமான ஓஜஸ்ஸானது (oxygen) ஹ்ருதயத்தில் அதன் நிஜஸ்வரூபத்தை விட்டு ரஸ ரூபத்தை அடைந்து (ரஸதாதுவில் லயித்து) குழாய்மார்க்கமாக கொண்டு போகப்படுகின்றது. இப்படி ரஸரூபத்தை அடைந்த ஓஜஸ்ஸை திரவரூபமாகவும் ஷட் அஷ்டபிந்த்வாத்மகமென்றும் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதாகையால் ஓஜஸ் என்பதற்கு (oxygen)

என்று அர்த்தம் சொல்வதில் சாஸ்திர விரோதமில்லை. (4) புண்டரீகம்:—மீமாம்ஸகர்களுடைய அர்த்த நிர்ணயத்தை யாரும் ஆக்ஷேபித்ததில்லை என்றும் அதை ஆக்ஷேபிப்பதால் தமக்கு ஹானிஒன்றுமில்லை என்றும் சொல்லி பத்திராதிபரவர்கள் சாந்தமடைகிறார். ஆயுர்வேதாசாரியர்களுடைய அர்த்த நிர்ணயத்தை ஆக்ஷேபிப்பதால் தமக்கு ஹானி ஒன்றும் இல்லை என்று நினைத்து ஹிருதயத்தைப்பற்றியுள்ள இந்த விவாதத்திலிருந்து இவர் விலகாமலிருப்பதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. மீமாம்ஸகர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதும் பத்திராதிபரவர்கள் கொண்டுள்ளதுமான அர்த்தம் ஒன்றுதானு வென்பதில் தான் ஆக்ஷேபத்தின் பீஜமிருப்பதென்று தெரியவருகிறது. இந்த வாதமானது பிரகிருதத்திற்கு உபயுக்தமல்லவென்று நினைத்து நாம் அதை விட்டுவிட்டோம். அவசியமானுல் மேலில் இதைப்பற்றிச்சிந்திக்க சித்தமாயிருக்கிறோம். செந்தாமரையானது குங்குமம்போன்ற ரக்தவர்ணமில்லாமல் ஸித ரக்தவர்ணமாகவே காணப்படுவதாகச் சொல்லுகிறார். இந்த உண்மையை யாரும் மறுக்கவில்லை (5) உரஸ்:—'அந்த:' என்ற பதத்திற்கு உள்ளே என்றும் மத்தியில் என்றும் நுனியில் என்றும் பல அர்த்தம் சொல்லிக் கஷ்டப்படுவதை காண்கிறோம். உரஸ்ஸினுடைய மத்தியபாகத்தையும் நுனிபாகத்தையும் விட்டுள்ள இதர பாகத்தை 'உள்ளே' என்ற அர்த்தத்தால் கிரஹித்துக்கொள்ள முடியுமானுல் அந்த: என்ற பதத்திற்கு வேறு அர்த்தம் தேடி சிரமப்படுவானேன்? உரஸ் என்பதை சுவாஸாசயமாகக்கொண்டு அதற்கு உள்ளே என்றும் வெளியே என்றும் சொல்வது அதன் ஸ்வரூப ஞானமில்லை என்பதற்கு அத்தாக்ஷியாகும். 'உரஸ்த:' என்ற பதமானது வியாதிக்குஅதிஷ்டானமான உறுப்பைக் காட்டுவதில்லை. விகாரத்தை அடைந்த தோஷத்தின் ஸ்தானத்தைதான் அது குறிப்பிடுகிறது, 'ஆமாசயஸ்தோ ஹத்வாக்நிம்' என்ற வசனத்தில் "ஆமாசயஸ்த." என்ற பதமானது வியாதிக்கதிஷ்டானமான உறுப்பைக் காட்டுவதாக நினைக்கமுடியுமா? அப்படியானுல் ஆமாசயத்தில் எவ்வளவு உறுப்புகள் இருக்கின்றன? அவை எல்லாம் வியாதிக்கதிஷ்டானமாக விருக்குமானுல் உரஸ்ஸிற்குள் உள்ள உறுப்புகள் முழுதும் ஏன் அப்படி யிருக்கக்கூடாது? (6) அலங்கா

ராரோபணம்:—"ஹ்ருதயம் புண்டரீகவத்" என்ற வசனத்தில் அலங்காரத்தை ஆரோபித்து அதை நிஷேதித்ததாக அபவாதம் சொல்லப்பட்டுள்ளது விந்தையிலும் விந்தை. பாண்டித்யத்தின் பரிகியில் பெடாத ஓர் தந்திர விசேஷமென்றே இதைச் சொல்லவேண்டும். பத்திராதிபருடைய வியாசத்தில் இந்த பாகத்தை வாசகர்கள் ஒரு தடவை கூட படித்துப்பார்க்கவேண்டும். அலங்கார நிரூபணமா அல்லது பிரமாண நிரூபணமா என்று பண்டிதர்களாகிய வாசகர்கள் தீர்மானிக்கவேண்டியது. உவமையின் அங்கங்களையும் அதன் இரு வகை பேதங்களையும் விரிவாக வர்ணித்ததுமல்லாமல் 'சந்திர இவ முகமாஹ்லாதகம்' என்ற வசனத்தை திருஷ்டாந்தமாக வியாக்கியானித்தபிறகுமா அது அலங்கார நிரூபணமில்லாமல் போய்விடும்? இவர் பக்ஷத்தில் 'சந்திர இவ முகமாஹ்லாதகம்' என்ற வசனமானது 'கோஸதிருசோகவய:' என்ற வசனம்போல் பிரமாண வாக்கியமாக காணப்படுவது விசித்திரமாயிருக்கிறது. பிரதிபாத்ய விஷயத்தின் உண்மை விளங்குவதே வாதப் பிரதிவாதத்தில் நாம் கொண்டுள்ள பயனாகையால் 'ஹ்ருதயம் புண்டரீகவத்' என்ற வசனத்தில் அலங்காரமில்லை என்ற பத்திராதிபர் சொல்லானது நமக்கு சந்தோஷத்தைத்தருகிறது. (7) யோகி ஹ்ருதயம்:—சரீரத்தில் அநேக விடங்களில் த்யானத்திற்கதிஷ்டானமாக அநேக ஹ்ருதய கமலங்கள் இருப்பதாக யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுர்வேதத்தில் சொல்லியுள்ள ஹ்ருதயமும் அவையில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. 'யோகிநோ யத்ர பச்யந்தி' என்ற வசனத்தில் சொல்லியுள்ள ஹ்ருதயமானது வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதுதான் என்றாலும் 'உத்காட்ய யோககலயா...' என்பதில் சொல்லப்பட்டுள்ள ஹ்ருதயமானது வைத்திய சாஸ்திரத்தில் கூறியுள்ளதுதான் என்பதற்குப் பிரமாணமில்லை. வைத்திய ஹ்ருதயத்திற்கும் யுக்திக்கும் அநுரூபமாக இதை வியாக்கியானிப்பதாயிருந்தால் 'ஹ்ருதயாப்ஜ கோசத்தை சுவாஸகோசாபின்ன ஹ்ருதயமாக்கவேண்டுமென்று நாம் கூறியுள்ளோம். யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள ஹ்ருதயம் வேறு வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது வேறு எனும் சொல்லானது பத்திராதிபரவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் உரஸ்ஸிற்கு அர்த்தம் சொல்

லும்போது காவ்யத்தில் சொல்லப்படும் உரஸ்ஸானது வேறென்றும் வைத்திய சாஸ்திரத்தில் சொல்லியுள்ளது வேறென்றும் இவர் வாதிப்பது விந்தையே. 'தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம்' என்ற வசனத்தில் சொல்லியுள்ள ஸூக்ஷ்மஸுஷிரமானது சுவாஸகோசங்களானால் 'தயோ: அந்தயோ: ஸுஷிரே' என்ற வசன வியக்தி இருக்கவேண்டுமாம். நமது பக்ஷத்தில் சுவாஸாசயமும் 'ஹார்டும்' சேர்ந்ததுதான் ஹிருதயமாகுமென்றும் ஏகவசனமாகவுள்ள 'ஹிருதய' பதத்தைத்தான் 'தஸ்ய' என்ற பதத்தால் பராமர்சித்துள்ளதென்றும் பத்திராதிபர் மறந்துவிட்டார். எண்ணிறந்த அநேக சுவாஸகோசங்களைக் குறிப்பதற்காக "ஸுஷிராணி" என்று என் பிரயோகிக்கவில்லை? என்றுதான் இவர் கேட்க நினைத்ததென்று நம்புகிறோம், ஆனால் ஜாதியில் ஏகவசன பிரயோகம் பண்டிதர்களுக்குப் புதிதல்ல. மேலும் வசனத்தில் இவ்வளவுநிஷ்கர்ஷிப்பவரான பத்திராதிபர் தமது பக்ஷத்தில் இரண்டு சுவாஸாசயங்களாகச் சொல்லியுள்ள உரஸ்ஸின் விஷயத்தில் அதை வற்புறுத்தாமலிருப்பதும் விந்தையே. (8) ஸப்தசாதாரா:—ரக்தாசயமென்பது சுவாஸப்பைகளை வைத்துக்கொண்டால் ரக்தாசயத்திலுள்ள கோஷ்டாங்கமான ஹிருதயம் பரிசேஷாத் Heart ஆகியே தீரும் என்றும் இதை நாம் தைவவசாத் ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்றும் சொல்லி பத்திராதிபர் ஆனந்திக்கிறார். ஆனால் நமது வியாசத்தில் இந்த பாகத்தை ஒரு தடவைகூட அவதானத்துடன் படித்துப் பார்க்கவேண்டுமென்று இவரை கேட்டுக்கொள்ளுகிறோம். நமது வாக்கியத்திற்கு இவர்க்கு அநுகூலமான அர்த்தத்தை 'வைத்துக்கொண்டு' ஸந்தோஷப்படுவதில் ஆக்ஷேபணை இல்லை. சுவாஸாசய பித்திகளில் வலைபோல் நெருங்கிப் பரவிக் கிடக்கும் எண்ணிறந்த ரக்தக்குழாய்களைத்தான் ரக்தாசயமென்று (சாஸ்திர திருஷ்டியாலல்ல. ஹிருதயம் ரக்தாசயமென்ற பத்திராதிபர் பக்ஷத்தை தற்காலம் ஆதரிக்கவெண்ணங்கொண்டுதான்) நாம் முதல் வியாசத்தில் கூறியுள்ளது. இந்த ரக்தாசயமும் சுவாஸாசயமும் வேறென்று மறுபடியும் சொல்லவேண்டுமா? (9) உரஸ் என்ற இரண்டு பைகள்:— கபாசயத்தில் உரஸ் என்ற இரண்டு பைகள் இருப்பதாக நூல்கள் சொல்லுகின்றன போலும். எந்த நூல்களில் அப்படி

சொல்லியிருப்பதென்று காட்டுவதற்காக எடுத்துள்ளப் பிரமாண வசனத்தில் அதைமட்டும் சொல்லக்கிடையாது. கபாசயத்தில் க்லோம புப்புஸங்களாக சுலோகத்திற்கர்த்தம் சொல்லி அதை Lungs என்றும் உரஸ் என்றும் பத்திராதிபரவர்கள் நாமகரணம் செய்திருப்பதாகக் காண்கிறோம். (10) பத்மாகாரம்:–பத்மலா திருச்யத்தைக்குறித்து நமது முன் வியாசத்தில் சொல்லியுள்ளதை மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

ஹிருதயம் (பத்திராதிபர்)

டாக்டர் V. அச்சுதன்நாயர் அவர்கள் எழுதியுள்ள மறுப்பிற்கு நாம் மறுபடியும் மறுப்பு எழுதுவது மிகவும் அனுவசியமே. "சேஷம் கோபேன பூரயேத்" என்ற வசனத்தை யவலம்பித்து ஆபாதசூடம் அமைந்துள்ள வியாசத்தை விமர்சம் பண்ணுவது அனுசிதம். ஸ்வமதஸ்தாபன பரமதகண்டனமின்றியே ஓர் மறுப்பை எழுதிவிட முடியுமென்பது இதனால் புலப்படுகின்றது. நாம் ஏற்கனவே எழுதியுள்ள விஷயங்களில் ஒன்றையும் அணுகாமலே இம்மறுப்பு தூர விலகி நிற்பதைஸ்தாலீபுலாகந்யாயத்தால் காட்டுகிறோம். அஷ்டாங்க ஸங்கிரஹம் கல்பஸ்தானம் 8-வது அத்யாயம் இந்து வியாக்யானத்தில் "சரநாத ஸம்ஹிதா பட்டார ஹரிச்சந்திர கிருதா ச்ரூயதே] ஸா ச சரகப்ரதி பிம்பரூபைவ லக்ஷ்யதே]" என்று காணப்படுகிறது. இதன் பொருள்—"சரநாதஸம்ஹிதை என்ற வைத்ய நூல் சரகஸம்ஹிதையின் பிரதிபிம்பமாக விருக்கிறது." அதாவது இரண்டு ஸம்ஹிதைகளும் ஒரே மதத்தைத்தழுவியவை என்பது பொருள் இவ்விதமே டாக்டர் V. N. நாயர் அவர்கள் வியாசமும் டாக்டர் V. அச்சுதநாயர் அவர்கள் வியாசமும் பிம்ப பிரதிபிம்பங்கள் என்றால் ஒரே மதத்தைத் தழுவியவை என்பது வியக்தமான பொருள். இந்தப்பொருளில் சந்தேகம் கொள்ளுவது மிகவும் அசம்பாவிதம். அதை மறுக்கவேண்டுமாகில் இருவர்களுக்கும் மதபேதத்தைக் காட்டியிருக்கவேண்டும். மறுப்பில் மதபேதம் காட்டப்படவில்லையாதலால் நம் வாதமே ஊர்ஜிதமாகிறது. "வாக்யசைலி" என்றவிடத்தில் சொற்குற்றம் காட்டப்படுகிறது. சொற்குற்றம், இலக்கணக்

குற்றம், அசகுபபிழை, முதலியவைகளை வளர்த்துவதால் பிரதான வாதத்திற்கு மறுப்பாகாது. "வாக்யார்த்த சைலீ" என மாற்றிவிட்டால் சொற்குற்றம் நீங்கிவிடும். (2) தசமூலஸிராஹ்ருத்ஸ்தா:— "ஹ்ருதயத்தில் பத்துமூலஸிரைகள் இருக்கின்றன" என்று நாம் சொல்லவில்லை. வசனம் கூறுகின்றது. இவ்வசனத்தை ரக்ஷிக்க வேண்டியது எல்லா வைத்தியர்களுடைய கடமையாகும். எண்ணிக்கையில் இருக்கும் பேதத்தை நாம் மாத்திரம் ஸமர்த்திக்கவேண்டுமென்றுநமது கண்டனக்காரர் கூறுகிறார். "சாரீரே சுச்ருதோக்ஷ்ட:" என்ற கோஷ்டியினர் பெருகிவருவதாகக் காணுகின்றது. விவக்ஷா பேதத்தால் கிளை ஸிரைகளையும் சேர்த்து பத்து என்ற எண்ணிக்கையை நாம் ஸமர்த்தனம் செய்கிறோம். இது அப்பிரதான வாதம். பிரதானமென்னவென்றால் மூல ஸிரைகள் எங்கு இருக்கின்றனவோ அது ஹ்ருதயம் என்று வசனம் கூறுவதால் மூல ஸிரைகள் Heart என்ற உறுப்பில்தான் இருக்கின்றனவேயன்றி Lungs களில் இல்லையென்பதுவே, Lungs களிலும் ஸிரைகள் இருக்கின்றனவென்றும் அவைகளால் சரீரம் முழுவதும் ரக்தம் வஹிக்கப்படுகின்றனவென்றும் காட்டுவதுதான் மறுப்பாகும். ஸமஷ்டிவசனமானதால் ஒரு பாகத்தில் அமைந்துள்ள மூலஸிரைகளும் ஸமுதாயத்தைச் சேர்ந்தவையானதால் பொருத்திவிடலாமெனில் சரீரம் முழுவதையுமே ஹ்ருதயபதம் குறிக்குமென்று ஒருவர் சொன்னால் அதை எப்படி ஆக்ஷேபிக்க முடியும். (3)ரஸாத்மகம் வஹந்த்யோஜ:—ஓஜஸ் என்பதும் Oxygen என்பதும் ஒன்று அல்ல என்றுநாம் எழுதியுள்ளோம். ஸங்க்ரஹம், சாரீரம், ஸிராவிபாகாத்யாயத்தில் "சுக்ரஸ்ய ஸாரம் ஓஜ:" அங்கவிபாகத்தில் "அர்த்தாஞ்ஜலிஓஜ:" என்பனபோன்ற வசனங்கள் சுக்ரத்தின்ஸாரம்ஓஜஸ் என்றும் அதன் அளவையும் குறிக்கின்றன. ஸங்க்ரஹம் ஸூத்ரஸ்தானம் 19வது அத்யாயத்தில் "தேஜோ யத்ஸர்வதாதூநாம் ஓஜஸ்தத்பரமுச்யதே] ரக்த மீஷத் ஸபீதகம்" என்று ஓஜஸ்ஸின் நிறம் முதலியன சொல்லப்பட்டிருக்கின்றன. "ஓஜ: க்ஷீயேத" என்று ஓஜஸ்ஸின் க்ஷயகாரணமும் "ஜீவநீயௌஷத க்ஷீர ரஸாத்யாஸ்தத்ரபேஷஜம் என்று மருந்தும், சாரீரஸ்தானத்தில் "ஓஜோஷ்டமே ஸஞ்சரதியாதாபுத்ரௌ முஹு: க்ரமாத்] தேநஜெளம்லானமுதிதெள

தத்ர ஜாதோ நஜீவதி] சிசுரோஜோ நவஸ்தாநாத் நாரீ ஸம்சயிதா பவேத்]" என்று அதன் விசேஷ காரியங்களும் வசன ஸித்தங்களானதால் ஆயுர்வேத ஓஜஸ் என்பது ஆங்கிலத்தில் Oxygen அல்ல என்று சொல்லுகிறோம். மேலும் சார்ங்கதரம் முதல்கண்டம் 5வது அத்யாயத்தில்" நாபிஸ்த ப்ராண பவந: ஸ்ப்ருஷ்ட்வா ஹ்ருத்கமலாந்தரம்] கண்டாத் பஹிர் விநிர்யாதி பாதும் விஷ்ணுபதாம்ருதம் பீத்வா சாம்பரபீயூஷம் புநராயாதி வேகத:] என்று விஷ்ணுபதாம்ருதம், அம்பரபீயூஷம், என்ற பதங்கள் ஆங்கில Oxygenஐ அனுசரிப்பதால் "ஓஜஸ்" என்ற பதம் சுக்ரஸாரமான ஓர் தாதுவைக் குறிப்பதாகும். ரஸத்தை plasma என்று விவரித்துள்ள நமது கண்டனக்காரர் oxygen ஐ ரஸதாதாத்மியம் பெற்று" என்று எழுதுவது பொருந்தாது. ஏனெனில் oxygen ஐ கிரஹிப்பது ஆங்கில மதப்படி Heamo globin என்ற அணுக்களாகும். ஆகவே நாம் முந்தி எழுதியுள்ள வாதம் மறுக்கப்படவில்லையென்பது வியக்தம். (4] புண்டரீகம்:—மறுப்பின் இந்த பாகம் மிகவும் அஸங்கதம். புண்டரீகஸாம்யம் lungs என்ற பொருளில் மிகவும் பொருந்துகிறது என்பது டாக்டர் V. N. நாயர் அவர்களுடைய மதம். புண்டரீகபதத்திற்கு ரக்தபத்மத்திலும் சக்தியிருப்பதால் நமது ஆக்ஷேபத்தை எழுதினோம். இந்த விஷயத்தை (1) "ரக்தகமலாகாரம்" என்ற ஆயுர்வேத வசனமே புண்டரீகத்திற்குப் பொருளைச் செந்தாமரையெனக்காட்டுகிறது. புண்டரீகத்திற்கு வெளுப்புத் தாமரை பொருள்கொண்டால் பூர்வாபரசாஸ்திர விரோதம் வருகிறது. (2) புண்டரீகாக்ஷன் என்ற மகாகவிப்ரயோகங்களில் செந்தாமரையே விவக்ஷிதம் (3) கப்யாஸம் புண்டரீகம் என்ற வைதிகப்ரயோகம் (4) சாபரபாஷ்யம் என்று இந்த நான்கு பிரமாணம் நாம் காட்டியுள்ளோம். இவைகளில் ஒன்றையும் நமது கண்டனக்காரர் மறுக்கவில்லை. சாபரவாக்யத்திற்கு நாம் சொன்ன பொருள்தானோ அல்லவா என்பதில் சந்தேகம் என்கிறார். இதுதான் மறுப்பா? சந்தேகமிருந்தால் தெளிந்தல்லவோ எழுதவேண்டும். அதை விட்டு "சந்தேகம்" என்று ஒருவர் வியாஸம் எழுதுவதை தற்காலம்தான் நாம் காணுகிறோம், இந்தபுருஷாயுஸ்ஸில் இவர்சந்தேகம்தெளிந்துமறுப்பு

எழுதும் காலத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். புண்டரீக பதத்திற்கு வெண்தாமரையில் சக்தியில்லை என்று நாம் சொல்லவில்லை அப்படியிருக்க அந்த அர்த்தத்தில் சக்தியிருப்பதைக்காட்ட புண்டரீக குஷ்டத்தைக் கண்டுபிடித்தார். அது இவருக்குப்பொருந்தவில்லையென்பதை நாம் ஏற்கனவே காட்டியுள்ளோம். விதாம்போஜத்தைக் குறிப்பதில் அனுசாஸநமே பர்யாப்தப்பிரமாணமாகும். அதற்குப்பிரயோகம் வேணுமென்று இவர் அபேக்ஷித்தால் காவ்யப்ரதீபம் முதல் உல்லாஸம், ஐந்தாவது சுலோகார்த்த நிரூபணத்தில் அடியில் காணும் சுலோகம் உதாஹரிக்கப்பட்டுள்ளது. "மத்யே வ்யோம ஸ்புரதிஸ "மனோ தந்வநச்சரண சக்ரம்] மந்தாநிந்யா விபுலபுலிநாப்யா கந்தா ராஜஹம்ஸ:] அஹ்நச்சேசே த்வரித சரண ந்யாஸமாகாச லக்ஷ்ம்யா:] ஸர்ஸர்பந்த்யா; ச்ரவணபதிதம் புண்டரீகம் மிருகாங்க:]] "இந்து சந்திரன் புண்டரீகம் என்று சொல்லப்பட்டிருப்பதால் வெண்தாமரையைக் குறிக்கிறதென்பது வியக்தம். (5) உரஸ்:- இதில் இவர் எழுதினவை சுத்த ஆபாஸமாகும். உரஸ் என்பது உரோகுஹையைக் குறிப்பதென்பது கண்டனக்காரர் விரதம். lungs இரண்டையும் பொதுவாகக் குறிக்குமென்பது நம்முடைய வாதம். நம் வாதத்திற்கு ஆதாரமாக "உரஸ்யந்த: க்ஷதே" "உரக்ஷதம்" என்ற வசனங்களைக்காட்டி இவ்விடத்தில் க்ஷதத்திற்கு ஆச்ரயமான பாகமான "உரஸ்" ஔசித்யத்தால் lungs ஆகும் என்றோம். இதற்கு மறுப்பாக நமது கண்டனக்காரர் உரஸ் என்பதற்குத்தன் அர்த்தத்தைச்சொல்லி "அந்த:" என்ற பதத்தால் க்ஷதத்திற்கு ஆச்ரயமான இடம் காட்டப்படுகிறது என்று எழுதி இருந்தார். நாம் அதற்கு மறுப்பாக "அந்த:" என்ற பதத்திற்கு மத்யம், ஓரம், முதலிய அர்த்தங்கள் தான் அநுசாஸந ஸித்தங்களானதால் அந்த பதம் lungs குறிக்காதென்றும் உரஸ் என்றபதம் தான் lungs குறிக்குமென்றும் எழுதியிருந்தோம். இந்த அம்சங்கள் எல்லாவற்றையும் சேர்த்துக்கவனிக்காமல் தாறுமாறாக மனம் போனபடி எழுதியுள்ளார். இங்கு ஒரு விசேஷம் அதாவது "உரஸ்த:" என்ற பதமானது வியாதிக்கு அதிஷ்டானமான உறுப்பைக் காட்டுவதில்லை. விகாரத்தை யடைந்த தோஷத்தின் ஸ்தானத்தைத்தான் அது குறிக்கிறது'! என்று எழுதியுள்ளார். இந்த

உபந்யாஸம் ஆயுர்வேத பண்டிதர்களுக்கு மனோ வேதனையை மிகப் படுத்துவதாகும். "ரோகஸ்து தோஷ வைஷம்யம் தோஷ ஸாம்ய மரோகதா" என்ற பிரதான ஆயுர்வேதக்கொள்கையையே இவர் உதாசீனம் செய்துவிட்டார். விகாரத்தை யடைந்த தோஷம்தான் வியாதி என்பது. ஆகவே தோஷ விகாரம் வேறு வியாதி வேறு என்று நினைப்பவர் ஆயுர்வேத பண்டிதராகமாட்டார். ஆரோக்ய மென்பது தோஷ ஸாம்யமே. "ஆமாசயஸ்த:" என்ற இடத்தில் தோஷவிகாரரூபமான ஜ்வர நோய்க்கு அதிஷ்டானம் ஆமாசயமே. அங்கிருந்து சரீரம் முழுவதும் பரவுகின்றது. ஆகவேதான் சிகித் சையில் "தஸ்மாத் குர்வீத லங்கனம்" என்று அதிஷ்டானத்தை யும் ஒட்டி சிகித்சை சொல்லப்பட்டிருக்கிறது. (6) அலங்காரா ரோபணம்:—டாக்டர் V, N நாயர் அவர்கள் வியாசத்தில் "ஹிருத யம் புண்டரீகவத்" என்ற வசனம் விமர்சம் செய்யப்பட்டு இந்த உவமையில் நாளத்வதளத்வங்களை ஸாதர்ம்யமாகக் கொள்ள வேண்டுமென்று விமர்சம் செய்யப்பட்டுள்ளது. V, N. நாயர் அவர் களுடைய அபிப்பிராயமென்னவெனில் ஹிருதயம் உபமேயம், புண் டரீகம் உபமானம், வதிப்ரத்யயம் உபமாவாசகம், நாளத்வதளத் வங்கள் ஸாதர்ம்யம் என்பதே. நம்முடைய மதமென்னவெனில் நாளத்வ தளத்வங்களை ஸாதர்ம்யமாகக் கொள்ளக்கூடாது ஏனெனில் (1) நாளத்வ தளத்வங்கள் அசாப்தங்கள் (2) "ஜாக்ர தஸ்தத்விகஸதி ஸ்வபதச்ச நிமீலதி" முதலிய வசனங்கள் ஸாதர்ம்ய வாசகங்களாக சாப்தங்களாக விருப்பது பாதிக்கப்படும் (3) ஆகவே சுருதஹாந அசுருத கல்பனம் என்ற தோஷம் பிரஸங்கிக்கும். (4) நாளதளங்களுடன் கூடிய நீலோத்பலம், ஆம்பல், முதலிய கோசங் களை விட்டு புண்டரீக ஸாம்யம் சொல்லுவானேன். (5) "திவாப்ர புத்யதேர்கேண" என்ற வசனங்கள் திவாராத்ரிகாலீன விகாஸஸங் கோசங்களை வியக்தமாக ஸாதர்ம்ய வாசகங்களெனக் கூறுகின்றன இவைகளுக்கு கதி என்ன? என்ற இந்த ஐந்து விஷயங்களை ஏற்கன வே சொல்லியுள்ளோம். இவைகளுக்கு மறுப்பு கண்டனத்தில் காணப்படவில்லை. லுப்தோபமையில் இஷ்டம்போல ஸாதர்ம்யத்தை நாம் விவக்ஷிக்கக் கூடுமாயினும் ஸாதர்ம்யம் வாசிகமாகவிருக்கும் இடங்களில், அதையே ஸாதர்ம்யமாகக் கொள்ளவேண்டும் என்ப

தற்கு உதாஹரணமாக "சந்திர இவ முகமாஹ்லாதகம்" என்று எழுதினோம். இந்த உதாஹரணத்தால் ஹிருதய புண்டரீகமும் உபமாலங்காரம் என்று எப்படி சித்தமாகும், நமது கண்டனக் காரர் ஸர்வ சாஸ்திரங்களையும் அறிந்தவரென்பதில் ஆக்ஷேபமில்லை ஆனால் வியாஸம் எழுதும்பொழுது படித்தவை யனைத்துமே ஸ்புரிக் காமல் போவது வியசனிக்கத்தக்கது. உபமானப் பிரமாணத்திலும் உபமான, உபமேய, உபமாவாசக, ஸாதர்ம்யங்கள் அனைத்தும் உபமாலங்காரத்தில்போலவே அபேக்ஷிதங்கள். அலங்காரத்தில் சமத்காரம்தான் அபேக்ஷிதம். உபமானப் பிரமாணத்தில் ப்ரமிதிகரணத்வம் அபேக்ஷிதம். ப்ரமிதி என்ற அம்சத்தில் யதார்த்த ஞானம் விவக்ஷிதம். மற்றவையனைத்தும் இரண்டுக்கும் துல்யமே. பிரகிருதத்தில் ஹிருதயம் உபமேயம், புண்டரீகம் உபமானம், வதி உபமாவாசகம், நாளவத்வ தளவத்வங்கள் ஸாதர்ம்யவாசகங்கள் என்பது உபயுவாதி ஸித்தம். 'கோ ஸத்ருசோ கவய:" என்ற இடத்தில் கவயம் உபமேயம், கோ உபமானம், ஸத்ருச என்பது உபமாவாசகம். இந்த ஸாதர்ம்யம் சொல்லப்படவில்லையாகையால் கவாவயவ ஸதிருசாகாரத்வம்' விவக்ஷிதம். இது அசாப்தமானதால் லுப்தோபமை, இது உபமானப் பிரமாணத்தால் உண்டாகும் சாக்ஷாத்காரப்ராப்ய க்ஷத்திற்கு உதாஹரணமாகும். இவ்விதமே "குஷ்டகந்தி புஷ்கரம்" என்ற இடத்தில் புஷ்கரம் உபமேயம், குஷ்டம் (அதாவது கோஷ்டம்) உபமானம், கந்தம்போன்ற கந்தம் என்பதால், உபமாவாசகமும் ஸாதர்ம்யமும் சொல்லப்படுகின்றது. இது உபமானப்பிரமாணத்தால் வரும்க்ராணேந்திரியப்பிரத்யக்ஷம். ஆகவே அலங்காரத்திற்குத் தேவையான அங்கங்கள் அனைத்தும் உபமானப் பிரமாணத்திற்கும் வேண்டியவைகளே, இல்லாவிட்டால் சாப்தபோதமே வாராமல் போக நேரிடும். 'கோஸதிருசோ கவய:" என்ற இடத்தில் லுப்தமான ஸாதர்ம்யத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால் இது பிரமாணமாக (பிரமிதிஜனகமாக) ஆகமாட்டாது ஆகவே லுப்தோபமை, பூர்ணோபமை, என்பவைகள் உபமானப் பிரமாணத்திலும் ஸம்பாவிதங்களே. இதை நாம் ஏற்கனவே சொல்லியிருந்தும் நமது கண்டனக்காரர் திருப்தியடையாமல் சொன்னதையே திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார், (7) யோகி

ஹிருதயம்: இதிலும் அஸங்கதமான விமர்சம் காணப்படுகிறது. "உத்காட்ய யோக கலயா ஹ்ருதாப்ஜ கோசம்" என்பனபோன்ற இடங்களில் அப்ஜகோசத்துடன் ஒப்பிடப்பட்ட ஹ்ருதயம் பரமாத்மா திஷ்டானமாகவேறு ஒன்று இருப்பதாக யோகசாஸ்திரத்தில் இருந்தால் நமது கண்டனக்காரர் அதை எடுத்துக்காட்டியிருக்கலாம். சரீரத்தில் பலஇடங்களில் த்யேயப்ரதேசங்கள் யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. "பத்மகோசப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்" என்பனபோன்ற உபநிஷத் வாக்யங்களும் அப்ஜ ஸாம்யம் சொல்லப்பட்ட மற்ற வசனங்களும் ஒரே ஹ்ருதயத்தைத்தான் குறிப்பிடுவதாகும். 8, 9, 10, களில் விமர்சமே வேண்டியதில்லை. இங்கு நாம் ஒன்று குறிப்பிடவேண்டியது அவசியமாகும். விவாதங்களில் கோபங்கொள்ளாமலிருப்பது நலம். விஷயத்தை நிரூபணம் செய்யவேண்டியது அவசியமேயன்றித்தாக்கிப் பேசுவது விரும்பத்தக்கதல்ல. உதாஹரணமாக டாக்டர் V. N. நாயர் அவர்கள் பிறரைத்தாக்காமல் தன்னுடைய மதத்தை நிரூபணம் செய்திருப்பதை எல்லாருமே பின்பற்றுவது நலம். அவர்களுடைய வியாஸத்தில் கம்பீரமான உபபாதனங்களையும் ஆழ்ந்த யுக்திகளையுமே காணுகிறோம். நாம் அவர்களுக்கு நேர் விருத்தமான மதத்தைக்கொண்டிருந்தபோதிலும் அவர்களுடைய வியாசத்தில் விஸ்மயம் அடைந்தவர்களுள் நாமே முதன்மையானவர்களென்று கூசாமல் சொல்லுவோம். வாதகதில் ஒரு கோடி சொல்லுவதற்குள்ளேயே நமது கண்டனக்காரர் கோபமடைந்து துர்பாஷைகளை மாத்திரம் சிரப்பி விஷயங்களை அடியோடு மறந்து வாத விஷயங்களை ஸ்பர்சிக்காமல் விட்டுவிட்டது வருந்தத்தக்கது.

விஷமஜ்வரம்.

(Dr. K. ஷாரோடி அவர்கள்)

இப்பாரதநாட்டில் மலேரியா என்றும் விஷமஜ்வரம் விசேஷமாய்ப் பரவிக்கடுமை பெற்று காலாகாலங்களில் தகுந்த பரிஹாரமளிக்கப்படாது பிரதிவருஷம் லக்ஷக்கணக்கில் மக்கள் உயிர் துறந்தொகையாக 1936 ஆம் இந்தியஸர்க்காரால் வெளியிட்

டுள்ள ரிப்போர்டில் வெவ்வேறு மாகாணங்களில் சுரத்தினீடுபட்டு வந்தவர்களுடைய தொகை பின்கண்டவாறாகும். ஐ-மா 751712 ம-மா 274670 மதறாஸ் 150000 அஸ்ஸாம் 95000 ஒரிஸா 95000 பர்மா 95000 பஞ்சாப் 168927 பிஹார் 300000 வங்காளம் 337647 பம்பாய் 2750 அந்தரிபோர்டுப்படி வருஷாவருஷம் 10 கோடிமக்கள் இச்சுரபீடிதர்களாகின்றனராம். இதையறிந்து தகுந்த பரிஹாரம் உறுதியான முறையில் செய்துகொள்வதற்காகவே கொய்னாவை ஏராளமான முறையில் உபயோகப்படுத்த வசதி அளித்துவருவதின் பயனாக இன்று "கொய்னா மலேரியா ஜுரத்தைப் போக்கடிக்க வல்ல ஓர் உத்தம ஔடதமென்று உலகமக்கள் எல்லோரும் அறிவார்கள். இதன் சிரேஷ்டத்தன்மையைக் கருதிஸர்வஸாதாரணமாக எல்லோரும் சுலபமாகப் பெற்றுக்கொள்ள அரசாங்கத்தார் இதைக்ரயர்மூலம் பெற்றுக்கொள்ள முன்னர் வசதியளித்திருப்பது போதாதெனக்கண்டு எங்கும் கிராமாதிகாரிகள் ஸுகாதார இலாக்காவதிகாரிகள் முதலியோரிடம் இலவசமாகத் தேவைப்படுவோர் வேண்டிய அளவில் பெற்றுக்கொள்ள வீற்பாடுசெய்து அவ்விதம் பெரும் பகுதியினர் பலன்பெற்றுவருகிறார்கள் என்பதுஉலகமறிந்த விஷயமாகும். இதன் நன்மைகள் விளங்கி இங்கிலீஷ் வைத்தியப்பட்டதாரிகளும் அங்கிலீஷ் பண்டிதர்களும் கூடசாதுதேவைகளில் கையாடிவருகிறார்கள் என்பதில் இதன் சிறப்பைச் சொல்லியும் காட்டவேண்டுமா? பண்டைக்கால முறைகளுக்கும் இக்கால அனுபவானுஷ்டான ஸித்தாந்தங்கள் படிக்கும் இவ்வௌஷதத்தின் ஆராய்ச்சி இங்கு ஒழுங்காகும். உண்மையில் சுரத்தில் கூடி எவ்வித உதவியையும் செய்ய வல்லஇம்மருந்து ஓர் கடும் விஷத்தன்மையுடையவஸ்துவாதலால் உட்கொள்ளப் பல பிணிகளை யெழுப்பிவிடுகிறதல்லாது போக்கடிப்பதில்லை, அதிக திக்த கடுரஸம் பெற்றமையால் உஷ்ண வீரியமும் கடுவிபாகமுமுடையது. இத்துடன் இதர குணங்களையும் யோசிக்குங்கால் விஷ ஸாமான்யத்தில் உட்பட்டதாகும். விஷஸாமான்ய பரிஹாரிகளான நெய் பால் முதலிய வஸ்துக்களேயே இதன் கெடுதல்களுக்குப் பரிஹாரங்கள். கடுரஸ மீதியிலிருப்பதால் ரஸதாதுரூபமாக தீபனம், பாசனம் ருசிகார், தோஷ சோதனம், ஆகின்றது. அசதி, விஷம், குஷ்டம்,

அரிப்பு, கிருமி முதலியவைகளைக் கொடுக்கின்றது. ஆண் பெண்களின் நாதபிந்துக்களை அழிக்கவும், பூட்டுசந்திகளை முடக்கவும், தேகவலிவைக் குறைக்கவும் வல்லது. தொடர்ந்துபயோகப்படுத்திவர மயக்கம், தேகக்காந்தல், வரக்ஷி, பலக்குறைவு, தேக நடுக்கம், ஆகிய பலவற்றை வலிய இழுத்துக்கொண்டு விடுகிறது. கை, கால்; முதுகுகளில்வாத வலிகளை எழுப்பிவிடுகிறது. உஷ்ண வீரியத்தினால் இரத்தத்தை அதிகமாய் கொதிக்கச்செய்து, சொறி சிரங்குகள், குஷ்ட விஸர்ப்பங்கள், நேத்திர கர்ண சிரோரோகங்கள் உண்டுபண்ணப்படுகின்றன. கடுவிபாகத்தினால் முன் வியாதிகள் உண்டாகக்காரணம் மிகுதியாகவேற்படுகின்றது. சுருங்கச்சொல்ல இதன் குணதோஷ விசாரணையில் குணங்களைவிட தோஷங்கள் இதில் மிகுதியாக விருக்கின்றனவென்பது உண்மைப்படும். லிங்கோநா என்றும் இதன் உற்பத்தி வஸ்துவிற்கும் இக்குணங்களையிருக்கின்றன. மேலும் க்ஷாரத்தன்மை (குணங்கள்) இதற்குப் பொருத்தமாதலால் இதை ஓர் உபக்ஷாரமாய்க் கருதுவதும் தகும். க்ஷாரவிசாரத்தை மூலக்ரந்தங்களில் கவனிப்பதே உசிதமாகும். (வளர்ந்தலைக்குறைக்க) இது கிருமிநாசனம், சோஷணம், ஆமசமனங்களைப் பெற்றிருப்பதால் சுரஹரமாக சில அன்னாள் வைத்தியர்களும் இந்நாள் படிப்பாளிகளில் எல்லோரும் தவறாது கையாடி வருகின்றனர். உட்கொள்வதால் விஷத்தன்மையை முன்னிட்டு கிருமிநாசனரூபத்தில் சுரத்தை விலக்குவதோடு இதியர்க மனிதர்களின் பலத்தையும் ஓஜஸ்ஸையுங் குறைக்கிறது. நீண்ட உபயோகம் மற்றும் பலபிணிகளை வேரூன்றச் செய்கிறது, எனினும் தொடர்ந்து சாப்பிடுவோர் அபின், கஞ்சாக்களைப்போல் இதற்கு அடிமைகளாக்கப்படுகிறார்கள். உபயோகப்படுத்த மெம்மேலும் துற்குணங்களுக்குள்ளாகின்றனர். புருடர்களின் தத்வத்தைக்கெடுக்கவல்லது இதுவே. மூத்திரக்கோளாறுக ளுண்டாகின்றன. பெண்களுக்குப் பால் குறைவு, மாதவிடாய்க்கட்டல், மலடுத்தன்மைகளையும் கொடுக்க வல்லது. ரத்தக்குறைவு, ரத்தக்கோளாறுகள், பலவுண்டாகின்றன. மேதோஹரமாதலால் கல்லீரல். மண்ணீரல்களின் பெருக்கு ஏற்படுகின்றது, தந்நிமித்தம் விடாஜுரத்தை வளரச்செய்கிறது.

அவ்வப்போது தற்காலசாந்தியாக மேலும் கொய்னாவை உபயோகப் படுத்தலாகிறது. பின்விடாதுபயோகப்படுத்த லாகிறது, வாவர கர்மேந்திரியம், பார்வைக்கருவிகளின் வலிவுகள், குறையலாரம் பிக்கின்றன. மூளை நரம்புகளில் வாயுக்கெடுதல்க ளேற்படுவதால் மயக்கம், பயித்தியம், முதலியன வுண்டாகின்றன. தீக்ஷ்ண, உஷ்ண, லகு, விசத, வியவாயி ஆகி கடுமை குணங்களிலிருப்பதால் விஷஸாம்யதையை ஒப்புக்கொள்ளவேண்டியதே. ஆனால் விதிப் படி சாப்பிடின் விஷம் அமிருத குணத்தைத்தருகிறது, இவ்விஷத் தை எப்படி சாப்பிடினும் கெடுதலைத்தவிர நன்மையைத் தாமாட் டாது என்பது உறுதியே. ஆதலால் இதை மஹாவிஷ சாபிதாவில் சேர்ப்பதே அதிக உசிதமாகும். நாகரீக பதார்த்தகுண சிந்தாமணி யில் இதைப் புஷ்டிகரமாய் கூறியிருக்கின்றனர். உண்மையில்இதன் உபயோகங்களினால் க்ஷயம், காஸம், சோஷங்களுண்டாகின்றன. கடுரஸக்காரத்தன்மை (க்ஷார) வஸ்து ஒருக்காலும் புஷ்டிகர மாகாதென்றே ஸர்வஸித்தாந்தம். இதன் உஷ்ண வீரிய ஸ்தம்பன குணங்களை புஷ்டிகரமிருப்பதாய் பிரமிக்கிறார்கள் (அபின், கள், சாராயம், கஞ்சா, வகையறாக்களைச் சாப்பிடுபவர்கள் அவ்வஸ்துக் களைப்பல புஷ்டிகரங்களாய் கூறி வருவதுபோல இது அல்ப அள வில் ஜாடராக்னியை விருத்திபண்ணுமென்றும் அதிக அளவில் கெடுக்குமென்றும் கூறுகிறார்கள். ரத்தக்கொதிப்பை வலுக்க வைத்துப்பல கோளாறுகளைக் கிளப்புகின்றமையால் பிண்ட (கர்ப்ப) க்கழிவைப்பயந்து இதை கர்பிணிகளுக்குத் தடைப்படுத்தியுள்ளார் கள். குறிப்பிட்ட சுரத்தைப் போக்க வுத்தமமானதிதுவாக முடிவு கட்டிப்ரசாரம் செய்யப்படுவதல்லவா? இதன் உபயோகம் பல கெடுதல்களையும் உண்டுபண்ணுவதாய் ஒப்புககொள்வதுண்டு. அப் படியிருப்பின் ஒரு நன்மையேற்படப்பல கெடுதல்களை எழுப்ப வொண்ணாது சுரத்தைப் போக்கடிக்க வேம்பு, நிலவேம்பு, பர்பாட கம்,மஞ்சி, புங்கு, சீந்தி, கடுரோகிணி, நாளகம், பாஷாணம், ஆகிய பல மூலிகைகளும், தாதுப தாதுக்களும், யோகங்களும் கெடுதலின் னியில் உபயோகிக்கக் கிட்டுகின்றனமையால் இதுகளைத்தள்ளி கெடு தலிழைக்கும் கொய்னாவை விரும்புவானேன். உபயோகிப்பதும் நியாயப்பிசகே. விருத்த வைத்தியர்களில் சிலரும் ப்ரேமிகளில்

பலரும் தற்கால குணத்தை எண்ணிக்கையாளுகின்றனர். கிருமி சுரங்களை ஸ்தம்பிக்கச் செய்வதல்லாது இம்மருந்து கெடுப்பதில்லை. அத்தன்மை இதற்குக் கிடையாது. ஸ்தம்பனத்தினால் சுர முக்தாவஸ்தையை (தாற்காலீனமான)க்கண்டு கொய்னா சுரஹரமென்றெண்ணுகிறார்கள். சமனப்படாததால் சில நாட்களுக்குப்பின் ஸ்தம்பிதமான ஜுரம் எழும்பலாகின்றது. மறுபடி யுபயோகத்தால் ஸ்தம்பிதம், விட்டுவிட்டால் எழும்புதல். மறுபடியும் முன்படியே உபயோகம் தொடர்ந்து செய்யவேற்படுகிறது. உபயோகம் நிர்பந்தமாய் ஏற்படுகிறது. நிரந்தர உபயோகம் சரகோக்தப்படி பல கோளாறுகள் உற்பத்தியாகின்றன. முன் கூறியிருப்பதுபோல் சுரத்தை தற்காலிகமாய் போக்கடிக்க வெண்ணிச்செய்யும் இதன் உபயோகம் இரத்தக்கெடுதல்கள், சுக்ரமேதஸ்களின் குறைவு. மயக்கம், வாய், உதடு தொண்டைகளின் உலருதல், திரேக எரிச்சல், பலக்குறைவு, திரேக நடுக்கம், கை, கால், விளாப்பக்கர், முதுகுகளில் வாதவலி, வீரியஹானி, மேனைநக்கர்மி, கல்லீரல், மண்ணீரல்களின் விருத்தி, பாண்டுநோய் ஆகிய பலதொந்தரவுகளை எழுப்பிவிட்டுக் கடைசியாய் இறகுகளை யிழந்த பறவைகளைப்போல் நிலைமையைப் பெறுகின்றன. உட்கொள்ளும் மக்களுக்கு இவ்வித நன்மைகளைத் தவறாது தந்துவிடும் கொய்னாவின் மஹத்வம் ஆச்சரியப்படத்தக்கதெனச் சொல்லவும் வேண்டுமோ? "வியாதய: த[illegible] பசாரலாலிதா:........என்னும் வாக்யம் இங்கு ஞாபகத்திற்குவருகிறது. மலேரியா ஜுரம் பித்தாதிக்யமாக விருப்பதால் பித்தஹரா வுபசாரமே இங்கு சிலாக்யமாகும். மேலும் பித்தப்ரக்ருதியில் இதன் விளைவு அதிகம் இச்சுரத்தில் (முன் சொன்னதுபோல்) கொயினாவின் உபயோகம் பித்தத்தைத் தூக்கிவிடும் உடன் வாதக் கெடுதல்களையும் வலியக்கொண்டு சேர்க்கும். அவ்விதமாகையில் இது எவ்விதம் சுரசமனமாகக்கூடும். இது சுரகரமென்று கூறப்படுவது தகும். தெளிவு படுத்த நிம்பஸ்வரஸம் — திக்தரஸம், கடுவிபாகம் ஆயினும் சீதவீரியமாக விருப்பதால் பித்தாசனமூலம் சுரஹரமாகின்றது. கொய்னா விதற்கு விபரீதமாதலால் விபரீதம். சிந்தி—கசப்பு துவர் உஷ்ணவீரியமாயினும் திரிதோஷஹரம் தன்மூலம் சுரஹரம். அதிவிடயம்—கடுதிக்தம் உஷ்ண வீரியம்

கபபித்தஹரமாதலால் சுரஹரம் மற்றும் எவ்வஸ்துவையும் ஆராய்ந்துப்பார்ப்பின் சுரஹரவஸ்துக்கள் பித்தஹரங்களென்றே காணப்படும். கடு கஷாய மதுரரஸங்கள் சுரஹரங்களாகின்றன. இம்மூன்றின் சேர்க்கையோ பித்த சமன குணங்களோ கொய்னாவில் இல்லாததால் கேவல கபஹரமான கொய்னாவை பித்தரூபமான மலேரியா ஜுரஹரமாய்க் கருதுவது ஒவ்வாது. தருணஜ்வரத்தில் கொய்னாவின் உபயோகத்தினால் ஆமாசயத்தி லேற்பட்டுள்ள ஆமகபகோளாறுகளை தற்காலிகமாக வளரச்செய்வதில்கிஞ்சித்லங்கனத்தன்மை யேற்படுவதன் மூலம் தற்கால சுர சமனமாய்க் காணப்படுகிறது. பித்தஜ்வரத்தில் விபரீதத்தைத்தான் விளைவிக்கின்றது. அளவிற்கதிகமாய் கபத்தை உலர்த்திக்கபக்குறைவின் கெடுதல்களைத்தருகின்றது. இது மென்மேலும் அவகுணங்களைக் கொடுப்பதால் திரோகநாசத்தை செய்கிறது. எட்டி முதலிய விஷங்களைப்போல் இதுவும் ஓர் ஸ்தாவர விஷமாதலாலும் பலவேறு கெடுதல்களைமட்டில் தருகிறதாலும் நம் முன்னோர்கள் வைத்திய விஷயத்தில் இதன் நாமஸ்மரணை கூடச்செய்யவில்லை யென்றே நாம் உணர்ந்துக்கொள்ளவேண்டும். ஸிங்கோநா என்னும் ஓர் மாது தற்செயலாக இதைத்தன் கணவனை உபயோகிக்கச் செய்ய தற்காலிகமாக அவனுடைய ஜுரம் சமனமடைந்ததை அம்மாது பகிரங்கப்படுத்த அம்மரத்திற்கு அம்மாதின் பெயர் "ஸிங்கோநா" வழங்கப்பட்டது. அம்மரத்தின் க்ஷாரமே கொய்னாவாகும். சோகை, மதுமேகம், குஷ்டவிஸர்ப்பம், நபும்ஸகத்வம் முதலிய கோளாறுகளையும் இதன் நீண்ட உபயோகம் கிட்டச்செய்யும். ஆகையால் அறிவாளிகளும் ஸாதாரணர்களும் இதன் முழு குணதோஷங்களை நன்றுயுணர்ந்தும். Indian Medical Service ல் பிரதானி ஒருவர் "கொய்னா மலேரியாவை தற்காலிகமாக அடக்கிறதைத்தவிர அடியோடு எடுக்கிறதில்லை. நெருப்புக்குச் சமானமாக விருப்பதால் கொடுத்த பலருக்கும் கெடுதல்கள் பலவுண்டாயிருக்கக்கண்டேன். இதற்துபதில் புங்கைமரத்தின் உபயோகம் மிக்ச்சிலாக்கியமாய் கண்டறிகிறேன்." "என்று கூறியுள்ளதையு முணர்ந்தும், மக்களை ஆபத்தினின்றும் எழத்தன்மையினின்றும் காப்பாற்றிக்கொள்ளத் தகுந்த முறைகளைக் கைபாடி வரவேண்டிய தவசியமாகும்; எற்கன

வே சொல்லியிருப்பதுபோல் ஆதார ஆதேயங்களின் குணதோஷ களைப்பொறுத்து பல்வேறு சுரங்கள் காண்பினும் அவைகளை ஸ்தந்திர பரதந்திரத்வென கண்டறிந்து ஸ்வதந்திரத் தெ களை முன்னும் பரதந்திரங்களை பின்னும் அல்லது ஏகே யுக்தி அவச்யானுஸாரம் பரிஹரித்தலே பயன்பெறுவதாகும். மாதௌ பரீக்ஷித தஜோனந்தர மௌஷதம், தத; கர்ம பிஷ சாத் ஞானபூர்வம் ஸமாசரேத் என்ற வாக்கியத்தில் கூறியிருப்ப மிதுவே. சுரத்தைப்பற்றி மென்மேலும் வளர்த்துவது வாச களுக்கு அருவருப்பை யுண்டுபண்ணுமென பயந்து கடைசியா கீழ்க்கண்ட வார்த்தைகளுடன் இவ்வியாஸத்தை முடிக்க விரும் கிறேன். ஆரம்பத்தில் காண்பித்திருக்கும் ஆன்றோர்களின் வ யப்படி (தக்ஷாபமான ஸம்க்ருத்த ருத்ரநிச்வாஸஸம்பவ:) இச்சு தைவ்யபாச்ரயமாக வுண்டாகின்றது என்று போதிக்க டுள்ளோமல்லவா, ஆகையினால் இப்பீடையில் கடவுளின் வழிபா களையும் செய்துகொள்வது அதிகப்பயனைப் பெறுவதாகும். வாக்கியத்திற்குப பலவிதமாக அர்த்தங்கள் கூறபபட்டுள்ளன. முன்காலத்து தக்ஷன் என்றும் பிரம்ம புத்திரன் ஸதி என்றும் பெண்ணை ஏற்கனவே பரமசிவனுக்குக் கல்யாணம் செய்து பின்னர் தான் செய்துகொள்ளும் யாகத்திற்கு ஷடி பெண் பிள்ளைகளை யழைக்காது நடத்தும்கால் பெண்ணான ஸதி வி தையுணர்ந்து தகப்பனிடம் செல்ல விரும்பிக் கணவரிடம்வற்பு தி விடைபெற்றுப்போய் சேரையில் கூப்பிடாது வந்த பெண்ணை அவள் கணவனையும் பலமாய்ப் பழிக்கக்கேட்டு காதடைத்துப் கோபாக்னி யென்றும் யோகாக்னியில்விழுந்ததைக் கேட்ட சிவனின் கோபாக்னி (வீரபத்திரன், பத்திரகாளி என்ற ரூபத்து தக்ஷனின் கழுத்தை யறுக்கக்கண்ட தேவமுனிவர்கள் பக் பரமசிவனைப்பணிந்து கோபத்தைத் தணிக்கவேண்டியதின்பேரி சாந்தியடைந்தாரென்றும் முன் உண்டான கோபம் உலகத்த அறிந்து தன்னை (கடவுளை) மறக்காதிருக்கவேண்டி ஜுரரூ பரவவேண்டுமென்றும் தன்னை நினைப்போரை யணுகாதெ மொழிந்துள்ளார் என்று புராணவசனப் பொருள்.